செ.வெ.எண்: 57 நாள்:19.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**கொல்லிமலை அரசு பழங்குடியினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் உலக தரத்திலான நவீன தொழிற்துறை தேவைக்கேற்ப தொழிற்கல்வியை வழங்கி, மாணவ, மாணவியர்கள் சர்வதேச அளவில் திறன் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் நிலையை உருவாக்கிட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் அறிவுறுத்தல்.**

------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொல்லிமலை அரசு பழங்குடியினர் தொழிற்பயிற்சி நிலையத்தின் நலன்கள் மற்றும் மேம்பாட்டு திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது,**

தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவ, மாணவியர்களுக்கு உலகதரத்திலான நவீன தொழிற்துறை காலத் தேவைக்கேற்ப தொழிற்கல்வியை வழங்கி மாணவ, மாணவியர்களை மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் திறன் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் நிலையை உருவாக்கிட வேண்டுமெனவும், அரசால் ஒப்புவிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கான சேர்க்கைக்கான 100 சதவீத தேர்ச்சி மற்றும் 100 சதவிகித பணியமர்த்துதலை உறுதி செய்திட வேண்டுமெனவும், தொழிற்தேர்வுகளில் கலந்துகொள்ளாத தேர்ச்சிபெறதா மாணவர்களை கண்டறிந்து சிறப்பு வகுப்புகள் நடத்தி அனைவரையும் தேர்ச்சிபெற செய்து தக்க பணியமர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

மேலும், தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களின் உள்ளூர் மற்றும் அண்டை மாநிலங்களில் உள்ள பிரபல தொழிற்நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று நாளது தேதியில் உள்ள நவீன தொழில் வளர்ச்சிகளை நேரடியாக கண்டு, மாணவ, மாணவியர்கள் தங்களின் தொழிற்திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஊக்கம் பெற உரிய ஆவண செய்திட வேண்டுமெனவும், போக்குவரத்து வசதி குறைவாக உள்ள மாணவ, மாணவியர்கள் உணவுடன் கூடிய தங்கும் வசதிகளை மேம்படுத்திடவும், படித்து முடித்த பின் நிலையத்திலிருந்து தேர்ச்சி பெற்று வெளியில் சென்று பணியமர்வு பெற்றவர்கள் போக எஞ்சியுள்ள மாணவ, மாணவிகள் குடும்ப சூழல் காரணமாக பணிக்கு செல்ல முடியாதோர் முன்னாள் மாணவர் சங்கம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி தங்களுடைய பகுதிகளிலேயே சுய உதவிக்குழுக்களை ஏற்படுத்தி கொண்டு ஆயத்த ஆடைகள் தயாரிப்பு பிரிவில் தங்கள் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்ள ஆலோசனை வழங்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

தொழிற்பயிற்சி நிலைய மேம்பாட்டிற்காக அரசால் ஒப்புவிக்கப்பட்ட கூடுதல் நிதியின் கீழ் உள்ள கட்டுமானப்பணிகள் குறித்தும், நிலுவையில் உள்ள கான்கிரீட் அணுகு சாலை, திறந்த வெளி கிணறு மூலம் மின்மோட்டார், குழாய் இணைப்பு டேங்க் போன்ற பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென உத்தரவிட்டார். மேலும், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலக மூலம் மாவட்டத்தில் இடைநிற்றல் மாணவர்கள் பட்டியல் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு பெற்றோர் பட்டியல் பெற்று நிகழும் கல்வியாண்டில் நூறு சதவிகித சேர்க்கை உறுதி செய்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட பழங்குடியினர் துறை அலுவலர் திரு.ராமசாமி, கொல்லிமலை அரசினர் பழங்குடியினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.ஆ.வெ.ஜெகநாதன், கொல்லிமலை தொழிற்பயிற்சி நிலைய மேலாண்மைக்குழு தலைவர் திரு.என்.ஸ்ரீதர், உட்பட கொல்லிமலை தொழிற்பயிற்சி நிலைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**